## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், பார்கின்சன் நோய், தண்டுவட மரப்பு நோய் ஆகிய நாட்பட்ட நரம்பியல் பாதிப்புக்கு உள்ளான நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் – செப்டம்பர் 2021 – காத்திருப்போர் பட்டியலில் உள்ள 144 பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க நிதி ஒப்பளிப்பு செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந-1)த் துறை

அரசாணை (D) எண் 9 — நாள்: 21.03.2022

பிலவ, பங்குனி– 7,

திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 66, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 12.07.2013.
2. அரசாணை (நிலை) எண் 32, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 09.10.2020.
3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித எண் 3090/உ.உ பிரிவு/2021, நாள் 29.12.2021.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் நல திட்டங்களுக்கு வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிற்குள் ஏற்கெனவே உள்ள கீழ்காணும் பயனாளிகளுக்கு செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

(i) மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை

(ii) கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை.

(iii) தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை.

(iv) தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல்.

(கு.பி.பா.)

2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், தமது கடிதத்தில், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், பார்சின்சன் நோய், தண்டுவட மரப்பு நோய் ஆகிய நாட்பட்ட நரம்பியல் பாதிப்புக்கு உள்ளான 1695 நபர்களுக்கு (ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை) 12 மாதத்திற்கான தொகை ரூ.3,05,10,000/- மாவட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு விட்டதாகவும், செப்டம்பர் 2021-ல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 144 பயனாளிகளின் விவரங்கள் மாவட்டம் வாரியாக அந்தந்த மாவட்ட அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டதாகவும், இப்பயனாளிகளுக்கு 7 மாதங்களுக்கு (செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை) பராமரிப்பு உதவித் தொகை வழங்க ரூ.15,12,000/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்)த்தினை நிதி ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், பார்கின்சன் நோய், தண்டுவட மரப்பு நோய் மற்றும் நாட்பட்ட நரம்பியல் பாதிப்புக்கு உள்ளான காத்திருப்போர் பட்டியலில் உள்ள 144 பயனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையினை ஆணை வெளியிடப்படும் நாள் முதல் கணக்கிட்டு (ரூ1500x144x1மாதம்=ரூ.2,16,000/-) (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) வழங்க மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் -02 – சமூக நலன்-101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்-CD – கடுமையாகப் பதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு படிகள்-309 – உதவித் தொகை-03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."

[IFHRMS த.தொ.கு 2235-02-101-CD-30903]

5. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[த.பி.பா.]

6. மேலே பத்தி-3இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண் 14082/நிதி(சந)/2022, நாள் 21.03.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிக்ள் நல அலுவலர்கள் (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர் சென்னை-18.

நகல்
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொ.-I)துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
21/03/2022